# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - II ( 2014 - 2015 )

## CLASS : IX

| Maximum Marks : 90 | TAMIL | Time 3 hours |
|---|---|---|
| மதிப்பெண்கள் : 90 | தமிழ் | நேரம் : 3 மணி |

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 20 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 14 பக்கங்களைக் கொண்டது.

### பகுதி - I

**1 ) பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடைவினாக்களுக்கு விடை தருக.**

சங்ககாலத்து இசைக்கலைஞர்கள் பாணர்கள் எனப்பட்டனர். " பண் " என்பதன் அடியாக இச்சொல் பிறந்தது. சிலவாகிய நரம்புகளைக் கொண்ட யாழ் சீறியாழ் எனப்பட்டது. சீறியாழ் கைக்கொண்ட பாணர்கள் சீறியாழ்ப்பாணர்கள் எனப்பட்டனர் . பலவாகிய நரம்புகளைக் கொண்ட யாழை இசைத்த பாணர்கள் பேரியாழ்ப்பாணர்கள் என அழைக்கப்பட்டனர். சங்ககாலத்தில் அன்றாட வாழ்வோடு இசையை இணைத்தவர்கள் பாணர்கள்.அவர்கள் ஊர் ஊராகச் சென்று தங்களது இசைத்திறனைக் காட்டி மன்னர்களையும், மக்களையும் மகிழ வைத்தனர். அழகுக் கலைகளையும் வளர்த்தனர்.மன்னர்களும்.வள்ளல்-

களும் பாணர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கினர்.வள்ளல்கள் பாண்பசிப் பகைஞர் எனப் பாராட்டப் பட்டனர். சில வள்ளல்களைச் சார்ந்து பாணர்கள் இருந்தனர். அத்தகைய வள்ளல்கள் பாணர் பெருமகன் என்று புகழப்பட்டனர். பாணர்கட்குப் பொற்றாமரையினையும், பாடினிகளுக்குப் பொன்னரி மாலைகளையும் வள்ளல்கள் கொடுத்தனர். பாணர்களுக்கு நிலம் அளித்தலும் உண்டு. பிற்காலத்தில் இது பாணப்பேறு எனப்பட்டது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i ) சீறியாழ் கைக்கொண்ட பாணர்கள்**

அ ) சிறியாழ்ப்பாணர்கள்

ஆ) பேரியாழ்ப்பாணர்கள்

இ ) வள்ளல்கள்

ஈ ) சீறியாழ்ப்பாணர்கள்

**ii ) வள்ளல்கள் பாடினிகளுக்கு வழங்கியவை**

அ ) தங்கத்தாமரைகள்

ஆ) பொற்காசுகள்

இ ) வெண்தாமரைகள்

ஈ ) பொன்னரி மாலைகள்

**iii ) பலவாகிய நரம்புகளைக் கொண்ட யாழ்**

அ ) சீறியாழ்

ஆ) பேரியாழ்

இ ) மகரயாழ்

ஈ ) சகோடயாழ்

**iv ) " பாண்பசிப் பகைஞர் " என்று அழைக்கப்பட்டவர்கள்**

அ ) கோவில் குருமார்கள்

ஆ) ஊர் மக்கள்

இ ) ஆடல் மங்கையர்கள்

ஆ) பேரியாழ்

**v ) பாணர்களுக்கு நிலம் வழங்கியது**

அ ) பாணப்பேறு

ஆ) கையறுநிலை

இ ) தந்துநிரை

ஈ ) பாணர்பாட்டு

2 ) ஆடற்கலையைக் கூத்துக்கலை என்றும் நாட்டியக்கலை என்றும் கூறுவர். நாகரிகம் பெற்ற மக்கள் முதல் நாகரிகம் பெறாத மக்கள் வரையிலும் குக்கிராமம் முதல் நகரம் வரையிலும் அனைத்து மக்களும் ஆடற்கலையைப் போற்றி வருகிறார்கள். குக்கிராமத்து வாசிகள் தங்கள் கிராமத்தின் நடுவில் அமைந் - திருந்த மரத்தின் கீழே, பால்போல் நிலவொளி சொரிகின்ற முழுநிலா இரவில் ஆடி மகிழ்ந்தனர். தொல்காப்பியத்தில் நாட்டியம் என்ற சொல்லாட்சி காணப் படுகிறது. 'நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது' என்ற நூற்பாவின் வாயிலாக தொல்காப்பிய காலத்திற்கு முன்பே நாட்டியக்கலை வழக்கில் இருந்தமையை உணரலாம்.மனத்தால் நினைப்பதை வாயினால் பாடுவது போன்று உறுப்புகளின் குறிப்பினால் கருத்துகளை விளக்குவது நாட்டியம் எனலாம். ஆடற்கலையில் முக பாவங்கள் இன்றியமையாதன.மகிழ்ச்சி, துக்கம், கோபம் முதலான உணர்வு- களை வெளிப்படுத்துவது ஆடற்கலையின் சிறப்பியல்பு. இவ்வுணர்வுகள் மெய்யின் கண்பட்டுத் தோன்றுவதால் மெய்ப்பாடு எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என மெய்ப்பாடு எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**i ) நாட்டியம் என்பது**

அ ) மனத்தல் நினைப்பதை வாயினால் பாடுவது
ஆ) உறுப்புகளின் உதவியால் கருத்துகளை விளக்குவது
இ ) மூலிகைகளைக் கொண்டு செய்யும் சிகிச்சை
ஈ ) புலன்களை அடக்கி மேற்கொள்ளும் விரதம்

**ii ) ஆடற்கலையின் மறுபெயர்**

அ ) நாட்டியக்கலை
ஆ) சிற்பக்கலை
இ ) ஓவியக்கலை
ஈ ) இசைக்கலை

**iii ) குக்கிராமம் - என்பதன் எதிர்ச்சொல்**

அ ) சிற்றூர்
ஆ) நகரம்
இ ) ஊர்
ஈ ) சேரி

**iv ) மெய்ப்பாடுகளில் ஒன்று**

அ ) இன்னமுதம்
ஆ) இளிவரல்
இ ) இசை
ஈ ) இருவாச்சி மலர்கள்

v ) தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை

அ ) ஒன்பது

ஆ) பத்து

இ ) எட்டு

ஈ ) ஏழு

3 ) சங்கரர் வடகேரளத்தில் உள்ள காலடியில் கிபி 730ல் பிறந்தார். இவர் அத்வைத சித்தாந்தங்களைப் பரப்பினார்.அதன்படி இறைவன் எங்கும் நிறைந்தி - ருக்கும் உயிர்ப்பொருள் ( பரமாத்மா ) என்றும் தனிமனித உயிர் ( ஜீவாத்மா ) என்றும் இறைவனை ஆன்மாவால் உணரும்போது தனிமனித உயிராகிய ஜீவாத்மா, பரமாத்மாவுடன கலந்து விடும் என்று கூறினார். இந்நிலையடைய அறியாமை அகன்றொழிய வேண்டும் என்பது அவர் கொள்கையாகும்.மேலும் உபநிடதங்களுக்கும், பகவத்கீதைக்கும், பிரம்ம சூத்திரங்கள் முதலியவற்றிற்கும் விளக்கவுரைகள் எழுதியுள்ளார்.தமது சித்தாந்தத்தைப் பரப்ப நாட்டின் நான்கு திசைகளிலும் வடக்கே பத்ரிநாத்திலும், மேற்கே துவாரகாவிலும்,கிழக்கே பூரியிலும், தெற்கே சிருங்கேரியிலும் ஆக நான்கு மடங்களை நிறுவினார்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i ) சங்கரர் பிறந்த இடம்**

அ) போர்ப்பந்தர்

ஆ) அயோத்தி

இ) காஞ்சி

ஈ ) காலடி

**ii ) சங்கரரின் கொள்கைகள்**

அ) அத்வைதம்

ஆ) விசிஸ்டாத்வைதம்

இ) துவைதம்

ஈ ) வைணவம்

**iii ) பரமாத்மா என்பது**

அ) தனி மனித உயிர்

ஆ) இறைவன்

இ ) உயிருள்ள பொருள்

ஈ ) உயிரற்ற பொருள்

**iv ) சங்கரர் விளக்கவுரை எழுதிய நூல்**

அ) பாகவதம்

ஆ) பகவத்கீதை

இ) சிலப்பதிகாரம்

ஈ ) தொல்காப்பியம்

**v ) தெற்கில் சங்கரர் அமைத்த மடம்**

அ) பத்ரிநாத்

ஆ) பூரி

இ) துவாரகா

ஈ ) சிருங்கேரி

## பகுதி - II **1 x 8 = 8**

4 ) வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் தோழன் / தோழிக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

( அல்லது )

குடியிருக்கும் பகுதியில் பழுதுபட்ட தெருவிளக்குகளைச் சீரமைத்துத் தருமாறு ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு பொது விண்ணப்பம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி,**

மணவழகன் / மலர்க்குழலி , இளந்தென்றல் தெரு , மன்னார்குடி , மதுரை - 16.

**1 x 8 = 8**

**5 ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

அ ) முன்னுரை - வேளாண்மை - வேளாண்மையின் சிறப்பு - உழவின் தேவை உழவன் நமது நண்பன் - பயன்கள் - முடிவுரை.

ஆ ) முன்னுரை - நான் ஆசிரியரானால் - விரும்பக் காரணம் - பெருமை - ஆசிரியப்பணி - ஒழுக்கம் - ஆசிரியப்பணியில் நான் - முடிவுரை.

இ ) முன்னுரை - உதகை - மலைகளின் அரசி - கவின்மிகு காட்சிகள் - சிறப்புகள் - சுற்றுலாதலம் - மலையின் சிறப்பு - முடிவுரை.

6 ) உனது பள்ளியில் நடந்த இலக்கியவிழா பற்றிய அறிக்கை எழுதுக. **1 x 4 = 4**

( அல்லது )

நிலத்தடி நீர் பாதுகாப்பு பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - III

7 ) சான்று தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

**i ) மொழிமாற்றுப் பொருள்கோள்**

அ) அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

ஆ) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

இ) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

ஈ ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**ii ) கெடுதல் புணர்ச்சி**

அ) வாழைப்பழம்

ஆ) மரவேர்

இ) தமிழ்ப்பாடம்

ஈ) பொன் வளையல்

**iii ) வெண்சீர் வெண்டளை**

அ) தாமரைப்பூ குளத்தினிலே

ஆ) செந்தாமரைக் குளத்தினிலே

இ) வானில்வளர் திங்களன்ன

ஈ) யாதானும் நாடாமல்

**iv ) வேற்றுமையணி**

அ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

இ) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு

ஈ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

v ) இணை எதுகை

அ) தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

ஆ) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இ) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஈ ) ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

8 ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

i) அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது __________ .

அ) சிந்தடி

ஆ) நெடிலடி

இ) நேரடி

ஈ) கழிநெடிலடி

ii ) தொடை விகற்பம் __________ வகைப்படும்.

அ) நான்கு

ஆ) இரண்டு

இ) முப்பத்தைந்து

ஈ ) எட்டு

iii ) உலகில் இல்லாத பொருளை ஒன்றிற்கு உவமையாக்கிக் கூறுவது __________.

அ) நிரல்நிறை அணி

ஆ) இல்பொருள் உவமையணி

இ) பிறிது மொழிதல் அணி

ஈ ) ஏகதேச உருவக அணி

iv ) அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது __________ எனப்படும்.

ஆ) அடி இயைபுத்தொடை

ஆ) தொடை விகற்பம்

இ) அளபெடைத்தொடை

ஈ ) முரண்தொடை

v ) அளவடிக்கு __________ என்னும் வேறுபெயருண்டு.

அ) குறளடி

அ) சிந்தடி

இ) நேரடி

ஈ) நெடிலடி

9 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

i) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
( இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணியைக் கூறுக )

அ) உவமையணி

ஆ) நிரல்நிரையணி

இ) உவமையணி

ஈ ) ஏகதேச உருவக அணி

ii ) பலர்புகழ் கபிலர் ( தளை கூறுக )

அ) நேரொன்றாசிரியத்தளை

ஆ) இயற்சீர்வெண்டளை

இ) நிரையொன்றாசிரியத்தளை

ஈ ) வெண்சீர்வெண்டளை

iii ) தாமரைப்பூ ( அசை பிரித்து எழுதுக )

அ) நேர் / நிரை / நேர்

ஆ) நேர் / நிரை / நிரை

இ) நேர் / நேர் / நேர்

ஈ ) நிரை / நிரை / நிரை

iv ) ஆறு + பாலம் ( சேர்த்து எழுதுக )

அ) ஆறுபாலம்

ஆ) ஆற்றுபாலம்

இ ) ஆற்றுப்பாலம்

ஈ ) ஆறுப்பாலம்



v ) திருவரங்கம் ( அசை பிரித்து வாய்ப்பாடு தருக )

அ) தேமாங்காய்

ஆ) தேமாங்கனி

இ) கருவிளங்காய்

ஈ ) கருவிளங்கனி

10 ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

INDIAN SCHOOL LIBRARY DAMMAM-SAUDI ARABIA

**i) தில்லை**

அ) தேமா

ஆ) புளிமா

இ) கருவிளம்

ஈ ) கூவிளம்

**ii ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.**

அ) உவமையணி

ஆ) இல்பொருள் உவமையணி

இ) பிறிது மொழிதல் அணி

ஈ ) வேற்றுமையணி

**iii ) நிரைபு**

அ) நாள்

ஆ) மலர்

இ) காசு

ஈ ) பிறப்பு

**iv ) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

அ) தாப்பிசைப் பொருள்கோள்

ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கொள்

இ) விற்பூட்டுப் பொருள்கோள்

ஈ ) கொண்டுகூட்டுப் பொருள்கொள்

**v ) மலர்மிசை**

அ) மாச்சீர்

ஆ) விளச்சீர்

இ) காய்ச்சீர்

ஈ) கனிச்சீர்

**11 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

**i)** அ) காய்ச்சீர் வெண்பா உரிச்சீர் என அழைக்கப்படுகிறது.

ஆ ) காய்ச்சீர் வெண்பா பொதுச்சீர் என அழைக்கப்படுகிறது.

இ ) காய்ச்சீர் வஞ்சியுரிச்சீர் என அழைக்கப்படுகிறது.

ஈ ) காய்ச்சீர் ஈரசைச்சீர் என அழைக்கப்படுகிறது.

ii) அ) அடி ஐந்து வகைப்படும்.
ஆ) அடி எட்டு வகைப்படும்.
இ) அடி நான்கு வகைப்படும்.
ஈ ) அடி ஏழு வகைப்படும்.

iii) அ) கல் + சிலை என்பது கல்சிலை எனப் புணரும்.
ஆ) கல் + சிலை என்பது கள்சிலை எனப் புணரும்.
இ) கல் + சிலை என்பது கற்ச்சிலை எனப் புணரும்.
ஈ ) கல் + சிலை என்பது கற்சிலை எனப் புணரும்.

iv) அ) ஒரூஉ 1 , 2 , 3 , 4 சீர்களில் வரும்.
ஆ) ஒரூஉ 1 , 2 , 3 சீர்களில் வரும்.
இ) ஒரூஉ 1 , 4 சீர்களில் வரும்.
ஈ) ஒரூஉ 1 , 3 , 4 சீர்களில் வரும்.

v) அ) செய்யுட்களில் காணப்படும் அழகே அணி எனப்படும்.
ஆ) செய்யுட்களில் காணப்படும் அழகே உவமை எனப்படும்.
இ) செய்யுட்களில் காணப்படும் அழகே போலி எனப்படும்.
ஈ ) செய்யுட்களில் காணப்படும் அழகே புணர்ச்சி எனப்படும்.

## பகுதி - IV

**12 ) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

நீரின்றியமையாது உலகு என்பது வள்ளுவம்.இயற்கை உணவுப் பொருள்களில் நீரில்லாத உணவுப்பொருள்களே இல்லை.எல்லாவகையான உணவுப் பொருள்களும் விளைவதற்குக் காரணமாக அமைவது நீர். உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மையடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது.எனவே நீரைத் தேவையான அளவுக்குக் ( நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று விட்டர் ) குடித்தல் உடலுக்கு நல்லது.உணவு உண்ணும்போது இடையில் நீர் குடித்தல் கூடாது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) நீரின்றமையாது உலகு என்று கூறியவர்**

அ) அகத்திய மாமுனிவர்
ஆ) திருவள்ளுவர்
இ) திகம்பரச்சாமியார்
ஈ ) சமண முனிவர்கள்

**ii ) குருதி என்பது**

அ) தண்ணீர்

ஆ) வெங்காயம்

இ ) இரத்தம்

ஈ ) உடல்

**iii ) உணவுப்பொருள்கள் விளைவதற்குக் காரணமாக இருப்பது**

அ) நீர்

ஆ) உப்பு

இ) கடல்நீர்

ஈ ) நெருப்பு

**iv ) நாளொன்றுக்குக் குடிக்க வேண்டிய நீரின் அளவு**

அ) ஒரு லிட்டர்

ஆ) இரண்டு லிட்டர்

இ ) மூன்று லிட்டர்

ஈ ) நான்கு லிட்டர்

**v ) உணவு உண்ணும் போது இடையில் நீர் குடிக்கலாம்ா ?**

அ) குடிக்கலாம்

ஆ) குடித்தல் கூடாது

இ) மூன்று லிட்டர் நீராவது குடித்தல் வேண்டும்

ஈ ) இவற்றில் எதுவுமில்லை

13 ) நாட்டாண்மைக்காரராக இருந்த காமராசரின் தாத்தா, பல சமயங்களில் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குத் தம்பெயரன் காமராசரையும் அழைத்துச் செல்வார். காமராசர் ஓர் ஓரமாக உட்கார்ந்தபடி தாத்தா கூறும் தீர்ப்புகளைக் கவனித்து வருவதைக் கண்ட பலரும் காமராசரின் பண்பைப் பாராட்டினர். காமராசர், திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று,அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.பின்பு, கல்வியோடு உணவளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று கற்றார்.காமராசர் தம் ஏழு வயதில் சுவரொட்டியில் வந்தேமாதரம் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். அந்த வார்த்தை அவரது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.விடுதலைப் போராட்ட உணர்வும் அவரது உள்ளத்தில் மெல்ல மெல்லச் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. பன்னிரண்டு வயதிலேயே பள்ளிப்படிப்பில் நாட்டமில்லாமல் போயிற்று.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**i) நாட்டாண்மைக்காரராக இருந்தவர்**

அ) காமராசரின் தந்தை

ஆ) காமராசரின் தமையன்

இ) காமராசரின் குரு

ஈ ) காமராசரின் தாத்தா

**ii ) காமராசர் தமிழ் எழுத்துகளைக் கற்றது**

அ) திண்ணைப் பள்ளியில்

ஆ) உயர்நிலைப் பள்ளியில்

இ ) மேல்நிலைப் பள்ளியில்

ஈ ) நடுநிலைப் பள்ளியில்

**iii ) ஏழுவயதில் காமராசர் மனதில் ஆழமாகப் பதிந்த வார்த்தை**

அ) வந்தேமாதரம்

ஆ) உண்ணாவிரதம்

இ) பசிப்பிணி போக்குவோம்

ஈ ) ஒன்றே குலம்

**iv ) காமராசர் தம் பள்ளிப் படிப்பை நிறுத்தியது**

அ) ஏழாம் வயதில்

ஆ) ஒன்பதாம் வயதில்

இ) பன்னிரண்டாம் வயதில்

ஈ) பதினெட்டாம் வயதில்

**v ) நாட்டம் - என்னும் சொல்லின் பொருள்**

அ) வேகம்

ஆ) விவேகம்

இ) விருப்பம்

ஈ ) வெறுப்பு

**14 ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

**கற்றைவார் சடையார் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்**
**பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்**
**முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்**
**குற்றமே யென்பான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.**

**<u>வினாக்கள்</u>** **4 x 1 = 4**

**i) கற்றைவார் சடையார் யார்?**

அ) பாண்டிய மன்னன்

ஆ) நக்கீரர்

இ) சிவபெருமான்

ஈ) தருமி

**ii ) உம்பரார் பதி யார் ?**

அ) இந்திரன்

ஆ) வருணன்

இ) வாயு பகவான்

ஈ) எம தர்மன்

**iii ) ஆகம் முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம் - இத்தொடர் யார் யாருக்குக் கூறியது ?**

அ) தருமி நக்கீரனுக்கு

ஆ) நக்கீரன் தருமிக்கு

இ) நக்கீரன் சிவபெருமானுக்கு

ஈ) நக்கீரன் பாண்டிய மன்னனுக்கு

**iv ) துன்புற்றபோதும் என்ற பொருளைக் குறிக்கும் சொல் எது ?**

அ) குற்றம் தேரான்

ஆ) அஞ்சான்

இ) முற்றுநீர்

ஈ) பற்றுவான்

**15 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

**அ)** ஏறு தழுவுதல் பற்றி எழுதுக. **2 x 5 = 10**

**ஆ)** காமராசர், பிரதமர்களை உருவாக்கிய நிகழ்வுகளை விவரிக்க.

**இ)** பொங்கல் கொண்டாடும் முறையை விளக்குக.

**ஈ )** வள்ளியம்மை குறித்துக் காந்தியடிகளின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**உ)** உண்ண வேண்டிய முறையை விளக்குக.

**16) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

அ) சான்றாண்மையின் பயன்களை விளக்குக. **2 x 4 = 8**

ஆ) மீனவர் பாடல்வழி அவர்தம் வாழ்க்கையைப் பற்றி விவரிக்க.

இ) பெண்மையின் குணங்களாக இராமலிங்கனார் கூறுவன யாவை ?

ஈ) நல்வினை , தீவினை இவற்றின் பயனாக மணிமேகலை கூறுவன யாவை ?

**17) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 8 = 8**

அ) கீரைகள் மூலிகைகளே என்பதை விளக்குக.

ஆ) கிளி ஏவ்வாறு விடுதலை அடைந்தது?

இ) முருகன், தனது பணத்தை எங்கு, எவ்வாறு தொலைத்தான் ?